**Deposition of witness**

**IN THE COURT OF DISTRICT MUNSIF, MELUR**

| | | |
|---|---|---|
| O.S.No. | : | 256/2011 |
| Deposition of Witness for | : | DW1 |
| Court | : | District Munsif Court, Melur. |
| Name | : | திரு.சிராஜீதின் |
| Father's name | : | திரு.முத்துமுகமது |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of of the 17th Day of March 2026.

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் 5ம் பிரதிவாதி ஆவேன். பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சி ஆவேன். எனது வாக்குமூலத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் எனக்குத் தெரியும். அதை நான் சொல்லச் சொல்ல எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டு, என்னால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டு என்னால் கையெழுத்து செய்யப்பட்டது. தாவா சொத்து தொடர்பாக மாண்புமிகு மதுரை 3வது சார்பு நீதிமன்றத்தில் E.P. 196/1983 in O.S. No.1020/1980 –ன் முத்துமுகமது அவர்களுக்கு

ஒப்படைப்பு செய்யப்பட்டத்தற்கான அத்தாட்சி மற்றும் அதன் ரிட்டன் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா சொத்து தொடர்பாக 2 முதல் 6 பிரதிவாதிகள் பெயருக்கு பட்டா மாற்றம் செய்வதற்கான உத்தரவு அசல் **பி.வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 1397, 1403, 1404, 1406 மற்றும் 1409 பசலிக்கான கிஸ்தி ரசீது அசல் (5 எண்ணிக்கைகள்) **பி.வா.சா.ஆ.4 வரிசையாக** குறியீடு செய்யப்படுகிறது. தாவா சொத்து சமந்தமாக செலுத்தப்பட்ட கிஸ்தி ரசீதுகள் அசல் (16 எண்ணிக்கைகள்) **பி.வா.சா.ஆ.5 வரிசையாக** குறியீடு செய்யப்படுகிறது. தாவா சொத்து தொடர்பான கணினி பட்டா கணினி நகல் **பி.வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. முத்துமுகமது என்பவரது வாரசு சான்றிதழ் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 2ம் பிரதிவாதி யாஸ்மின் என்பவரது இறப்பு சான்றிதழ் கணினி நகல் **பி.வா.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. யாஸ்மின் என்பவரது வாரிசு சான்றிதழ் கணினி நகல் **பி.வா.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அசல் வழக்கு தள்ளுபடி செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேலூர்.